# மே – 21 – செவ்வாய்

**புனிதர்கள், மறைபணியாளர்கள் - கிறிஸ்டோபர் மெகலனும் தோழர்களும்.**
**ஆண்டவரே! நீர் உருவாக்கிய யாவும் நன்றி செலுத்தும்: திபா. 145:10**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி14 : 19 – 28

அந்நாட்களில்அந்தியோக்கியாவிலிருந்தும் இக்கோனியாவிலிருந்தும் யூதர்கள் வந்து மக்களைத் தூண்டிவிட்டு, பவுல் மேல் கல் எறிந்தார்கள் அவர் இறந்துவிட்டார் என்று எண்ணி நகருக்கு வெளியே அவரை இழுத்துப்போட்டார்கள்.சீடர்கள் அவரைச் சூழ்ந்து நின்றபோது அவர் எழுந்து நகரினுள் சென்றார். மறுநாள் அவர் பர்னபாவுடன் தெருபைக்குப் புறப்பட்டுச்சென்றார்.அந்த நகரில் அவர்கள் நற்செய்தி அறிவித்துப் பலரைச் சீடராக்கிய பின் லிஸ்திரா, இக்கோனியா, அந்தியோக்கியா ஆகிய நகரங்களுக்குத் திரும்பி வந்தார்கள். அங்குள்ள சீடர்களின் உள்ளத்தை அவர்கள் உறுதிப்படுத்தி, "நாம் பலவேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்பட வேண்டும்" என்று கூறி நம்பிக்கையில் நிலைத்திருக்கும்படி அவர்களை ஊக்குவித்தார்கள்.அவர்கள் ஒவ்வொரு திருச்சபையிலும் மூப்பர்களைத் தேர்ந்தெடுத்து நோன்பிருந்து இறைவனிடம் வேண்டித் தாங்கள் நம்பிக்கை கொண்டிருந்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தார்கள். பின்பு பிசிதியா வழியாகப் பம்பிலியா வந்தார்கள்.பெருகை நகரில் இறைவார்த்தையை அறிவித்தபின் அத்தாலியா வந்தார்கள். அங்கிருந்து கப்பலேறி அந்தியோக்கியா வந்தார்கள் அங்குதான் அவர்கள் அருள் வழங்கும் கடவுளின் பணிக்கென்று அர்ப்பணிக்கப்பட்டார்கள். இப்போது அப்பணியைச் செய்து முடித்துவிட்டார்கள். அவர்கள் அங்கு வந்ததும் திருச்சபையைக் கூட்டி, கடவுள் தங்கள் வழியாகச் செய்த அனைத்தையும், அவர் பிற இனத்தவர்க்கு நம்பிக்கை கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்ததையும் அறிவித்தார்கள்.அங்கே அவர்கள் சீடர்களுடன் பல நாள்கள் தங்கினார்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரே! உம் மக்கள் உமது அரசின் மாட்சியை அறிவிப்பர்.

## நற்செய்தி : யோவான் 14 : 27 – 31

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம் மருள வேண்டாம்."நான் போகிறேன், பின் உங்களிடம் திரும்பி வருவேன்" என்று நான் உங்களிடம் சொன்னதைக் கேட்டீர்களே! நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் நான் தந்தையிடம் செல்வது பற்றி மகிழ்ச்சி அடைவீர்கள். ஏனெனில் தந்தை என்னைவிடப் பெரியவர்.இவை நிகழும்போது நீங்கள் நம்புமாறு இப்போதே, இவை நிகழுமுன்பே, சொல்லி விட்டேன்.இனி நான் உங்களோடு மிகுதியாக பேசப் போவதில்லை ஏனெனில் இவ்வுலகின் தலைவன் வந்து கொண்டிருக்கின்றான். அவனுக்கு என் மேல் அதிகாரம் இல்லை.ஆனால் நான் தந்தையின் மீது அன்பு கொண்டுள்ளேன் என்பதையும் அவர் எனக்குக் கட்டளையிட்டபடி செயல்படுகிறேன் என்பதையும் உலகு தெரிந்து கொள்ள வேண்டும். எழுந்திருங்கள், இங்கிருந்து போவோம்" என்றார்.

**தியானம்:** இறையாட்சியை நோக்கிய பயணமானது உண்பதையும், குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக கல்லும் முள்ளும், கரடும் முரடும் நிறைந்த பயணமாகும் என்பதை இன்றைய முதல் வாசத்தினூடாக காண்கிறோம். வீழ்ந்து எழாத மனிதன் பக்குவமடைய முடியாது. மழைத்துளி வீழ்கிறது மண் வளமடைகிறது. அருவி வீழ்கிறது ஆறு ஓடுகிறது. பவுலின் வாழ்க்கையும் இதைப் போன்றது. வீழ்ந்து வீழ்ந்து எழும்பி வீரத்துடன் பல்வேறு இடங்களுக்கு சென்று நற்செய்தி அறிவிப்பதுடன் பலரை மனமாற்றம் அடையச் செய்வதைப் பார்க்கின்றோம். அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன். நான் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல, மாறாக கிறிஸ்துவிடம் பெற்றுக் கொள்ளும் அமைதியானது. மறுவாழ்வுக்குரிய அமைதியாகும். எண்ணங்கள் மனிதனது எண்ணங்கள் போன்றது அல்ல எவ்வாறு மண்ணிலிருந்து விண் மிக உயரதிலிருப்பது போல கடவுளுடைய வழிகள் மனிதனுடைய எண்ணங்களை விட மிக உயர்ந்திருக்கின்றன. நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களும் கடவுளிடம் செல்லும் ஏணிப்படிகள். நாம் இவ் உலகம் சார்ந்தவர்களாக இருந்தால் உலகம் எம்மை அன்பு செய்யும். மாறாக நாம் இந்த உலகத்தின் போலித்தனங்களை எதிர்ப்போமேயானால் உலகம் எங்களை வெறுக்கும். கிறிஸ்தவர்களை துன்புறுத்தி கொலை செய்த சவுல், பவுல் அப்போஸ்தலனாக மாறமுடிந்தால் எம்மால் ஆண்டவருடைய வழியில் நடக்க முடியாதா? கடந்த பாவவாழ்வை ஆண்டவரின் பாதையில் அமைக்க வரம் வேண்டுவோம்.